Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.532/2019

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.அர்ஜுன் | Occupation | மதுபானக்கடை உதவி மேலாளர் |
| Father's name | ஜெயபாலன் | Calling | |
| Village | மதுரை | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of October 2025.

<u>09.10.2025</u>

3,4 மற்றும் 7ம் எதிரிகள் ஆஜர். 6ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் மதுபானக்கடையில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 27.06.2013 அன்று டாஸ்மாக் கடை எண்.11864 ல் ஆய்வு செய்தபோது ரூபாய்.8,66,200/- குறைவாக இருப்பது தெரியவந்தது. அதனால் மேற்படி பணத்தை மீட்பதற்காக காவலர்களிடம் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>3, 4 ,6 மற்றும் 7ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி சுந்தர் ஆகியோர் டாஸ்மாக் விற்பனையாளர்களாக வேலை செய்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மேற்படி டா்மாக்கின் மேற்பார்வையாளர்கள் சக்திவேல் மற்றும் சங்கர்ராஜ் என்றால் சரிதான். டாஸ்மாக் கடையில் வரும் வருமானங்களை வங்கியில் செலுத்துவது மற்றும் லாக்கரில் வைப்பது போன்றவை மேற்படி மேற்பார்வையாளர்களின் வேலை என்றால் சரிதான். பணங்களை

கையாள்வது மற்றும் வங்கியில் வைப்பீடு செய்வது போன்றவை விற்பனையாளர்களின் வேலை அல்ல என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் தணிக்கை செய்தபோது குறைவாக இருந்ததாக கூறிய ரூபாய்.8,66,200/- யை இவ்வழக்கின் 2ம் எதிரியாக சேர்க்கப்பட்ட சங்கர்ராஜ் என்பவரால் திரும்ப செலுத்தப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்படி பணம் காணாமல் போனது ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி சுந்தர் ஆகியோர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.